தேதி - 07-12-2022 **E.O.P.No**.78/2020 ம.சா.1 (வசந்தி)

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க மற்றும் புரிந்து கொள்ளக் கூடிய அளவு திறன் உள்ளதா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் தமிழில் தான் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய வழக்கறிஞர் தான் மனு தாக்கல் செய்துள்ளார். என்னுடைய கணவர் மின்சாரவாரியத்தில் பணியாற்றி வருகிறார். நான் தேர்தலில் போட்டியிட்ட தொகுதியானது கொட்டாம்பட்டி யூனியன் 4 வது வார்டு ஒன்றிய கவுன்சிலர் பதவிக்காக போட்டியிட்டேன். நான் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டேன் என்றால் சரிதான். 4 ம் எதிர்மனுதாரர் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டார். நான் 02.01.2020 ம் தேதியன்று தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிந்து அறிவிப்பு வெளியான பின்பு தான் மறுவாக்கு எண்ணிக்கை கோரி மனு கொடுத்தேன் என்றால் இல்லை. அதற்கு முன்பாகவே மனு கொடுத்தேன். 02.01.2020 ம் தேதியன்று வாக்கு எண்ணிக்கை முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டு 4 ம் எதிர்மனுதார் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ் பெற்ற பின்பு தான் நான் ஆட்சேபணை தெரிவித்து மனு தாககல் செய்தேன் என்றால் சரியல்ல. 02.01.2020 ம் தேதியன்று நான் முழுவதுமாக நின்றேன். சி.சி.டி.வி கேமராவில் 02.01.2020 ம் தேதியன்று நான் நின்ற விபரம் தெரியும். மறுநாள் 03.01.2020 ம் தேதியன்று தான் நான் தோற்றுவிட்டதாகவும், நீதிமன்றத்தில் பரிகாரம தேடிக் கொள்ளும்படியும் கூறிவிட்டனர். வாக்குஎண்ணிக்கைகள் அனைத்தும் சி.சி.டி.வி கேமராவில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வாக்குஎண்ணிக்கை அறிவிப்பு அவ்வப்போது ஒலிப்பெருக்கியில் அறிவிக்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆன ஆவணத்தின்படி ஏதேனும் ஆட்சேபணை உள்ளதா என்றால் இதில் 3083 வாக்குகள் உள்ளது. ஒரு வாக்குகள் மட்டுமே வித்தியாசம் என்றால் சரியல்ல. நான்கு வாக்குகள் தபால் வாக்குகள். ம.சா.ஆ.1 ஆன ஆவணத்தில் 3083 வாக்குகள் மட்டுமே உள்ளதாகவும், தபால்வாக்குகள் பற்றி இதில் குறிப்பிடவில்லை என்று நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்திலோ, மனுவிலோ கூறியுள்ளேனா என்றால் நான் மனு தாக்கல் செய்யும் போது ம.சா.ஆ.1 ஆன ஆவணம் என்னிடம் கொடுக்கப்படவில்லை. ம.சா.ஆ.1 ஆவணமானது மனு தாக்கல் செய்த பிறகு 09.12.2021 ம் தேதியன்று பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தை பெறுவதற்கு ஊராட்சி ஒன்றியத்தில் மனு கொடுத்த ஆவணத்தின் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 09.12.2021 ல் நான் சார்ந்துள்ள கட்சி தான் தற்போது ஆட்சியில் உள்ளது என்றால் சரிதான். நான் வழக்கிற்காக நான் சார்ந்துள்ள கட்சியை பயன்படுத்தி ம.சா.ஆ.1 ஆவணத்தை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

ம.சா.ஆ.1 ஆவணத்தில் அரசு முத்திரை இல்லை என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.2 ஆன தபால் வாக்குகள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் மனு கொடுத்து மேற்படி ஆவணத்தை பெற்றேனா என்றால் இல்லை. நேரடியாக என்னிடம் கொடுத்துவிட்டார்கள். ம.சா.ஆ.2 ல் மனுநாள் 03.02.2020 என குறிப்பிடப்பட்டு மனுவின் பேரில் கொடுக்கப்பட்டதாக அதில் கண்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ல் ந.க.எண்.700/2017 என கண்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ஆவணமானது மோசடியான ஆவணம் என்பதால் தான் 2020 ம் வருடத்திய மனுவிற்கு 2017 ம் வருடத்திய நடைமுறையின்படி மனு வழங்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 ல் 02.01.2020 ல் இரவு 1.30 மணியளவில் நான் வாக்குஎண்ணிக்கை நடைபெறும் இடத்தில் இருந்தேன் என்றும், பின்னிட்டு விரட்டப்பட்டேன் என்றும் ம.சா.ஆ.3 ல் கண்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆன மனுவானது என்னை விரட்டப்பட்ட பிறகு தான் நான் 2 ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ல் 02.01.2020 என கண்டுள்ளது என்றால் சரிதான். இரவு 1.30 என்பது 03.01.2020 அதிகாலை என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.3 ல் குறிப்பிட்டுள்ள தேதி தவறானது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆன மனுவானது உயர்நீதிமன்றத்தில் வைத்து எழுதப்பட்டு 04.01.2020 ம் தேதியன்று அனுப்பப்பட்டது. 2 ம் எதிர்மனுதாரான மாவட்ட ஆட்சியரிடம் நான் நேரடியாக மனு எதுவும் கொடுக்கவில்லை. தபாலில் தான் அனுப்பினேன். 2 ம் எதிர்மனுதாரருக்கு தபால் மூலமாக மதுரை தல்லாகுளத்தில் வைத்து அனுப்பினோம். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.4 ஆன ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.4 ஆவணமானது காந்தி நகர் அஞ்சலகத்தில் இருந்து அனுப்பப்பட்டதாக உள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. ம.சா.ஆ.4 ஆவணம் அனுப்பியதாக மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், அதனால் தான் ம.சா.ஆ.4 ஆன ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை என்றும், அனுப்பிய அஞ்சலக அலுவலகம் தவறாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.5 ஆவணத்தில் வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளரின் கையொப்பம், தேர்தல் நடத்தும் அலுவலரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அதே போன்று ம.சா.ஆ.6, 7, 8 ஆவணங்களிலும் வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளரின் கையொப்பம், தேர்தல் நடத்தும் அலுவலரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.5, 6, 7, 8 ஆவணங்கள் மனு தாக்கல் செய்த போது தாக்கல் செய்யாமல் பின்னிட்டு கூடுதல் ஆவணங்களுக்கு அனுமதி கோரி மேற்படி ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி

ஆவணங்களில் நீதிமன்ற முத்திரை 01.04.2020 என்று தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட காரணத்தினால் தான் மனு தாக்கல் செய்யும் போது மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9, 10 ஆகிய ஆவணங்களில் வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளரின் கையொப்பம், தேர்தல் நடத்தும் அலுவலரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.9, 10 ஆவணங்கள் ஜெராக்ஸ் என்றால் சரிதான். ம.சா.ஆ.9, 10 ஆவணங்களின் அசல் என்னிடம் இல்லை. ம.சா.ஆ.9, 10 ஆவணங்கள் மனுவிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும், ம.சா.ஆ.9, 10 ஆவணங்களின் அசல் ஆவணங்கள் என் கைவசம் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் 12 வாக்கு எண்ணிக்கை வித்தியாசத்தில் தோல்வியுள்ளதால் என்னால் தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றால் சரிதான். எங்களுடைய கட்சி ஆளுங்கட்சியாக இருப்பதால் அவர்களுடை நிர்பந்தத்தின் பேரில் தான் இந்த மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் மனுவிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்பதால் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. தேர்தல் முடிவு அறிவிப்பதற்கு முன்பாக நான் எந்த ஆட்சேபணையும் எழுத்துப்பூர்வமாக கொடுக்கவில்லை என்பதால் என்னுடைய மனு ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் ஆட்சேபணை மனு தாக்கல் செய்துள்ளேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.